THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 27th July 1957.

64802

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

SHORT NOTICE QUESTIONS.

MR. SPEAKER: இன்றைய தினம் 37 கேள்விகள் இருக்கின்றன. ஒரு கால் மணி நேரம் அதிகம் எடுத்துக் கொண்டாலும் சீக்கிரத்தில் அவற்றை எல்லாம் முடிக்க என்னுடன் அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

Hunger strike.

* 8*S. N. Q.*—SRI V. K. KOTHANDARAMAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that Sri K. Baladandayutham, a prisoner belonging to the Communist Party, is on hunger-strike since the first week of July 1957, in the Pudukkottai Jail;

(*b*) if so, the reason therefor; and

(*c*) what action the Government have taken to make the said prisoner give up the hunger-strike?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The convict resorted to hunger-strike on 2nd July 1957 and ended it on 14th July 1957;

(*b*) The hunger-strike was resorted to as a protest against his transfer from the Central Jail, Coimbatore, to the District Jail, Pudukkottai;

(*c*) The convict was informed that his request for retransfer to the Central Jail, Coimbatore, could not be complied with, and he was urged to give up the hunger-strike, which he did.

SRI M. KALYANASUNDARAM: இந்தக் கைதி பாலதண்டாயுதத்தை கோயமபுத்தூர் சிறையிலிருந்து மாற்றவேண்டிய காரணமென்ன? அவர் சிறை அதிகாரிகள் மீது புகார் செய்யப்பட்டிருந்தது வாஸ்தவமா? அதன் காரணமாகவே அவர் மாற்றப்பட்டார் என்பதும் உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அவர் சிறை அதிகாரிகள் மீது புகார் செய்திருக்கிறாரா? செய்திருந்தால் அவர் என்ன புகார் செய்திருக்கிறார் என்கிற தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை. ஆனால் அவர் சிறை அதுகாரிகள் மீது புகார் செய்தார், அதற்காக கோயம்புத்தூர் சிறையிலிருந்து மாற்றப்பட்டார் என்று சொல்வது தவறு. அவர் மாற்றப்பட்டது வேறு தகுந்த காரணத்திற்காகதான் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

SRI M. KALYANASUNDARAM : ஒரு சிறையில் இருந்து இன்னொரு சிறைக்கு கைதி மாற்றப்படுவதற்குரிய காரணம் அப்படி ஒன்றும் ரகசியமாக வைத்துக்கொள்ளவேண்டியது அல்ல. எந்தக் காரணத்திற்காக அவர் மாற்றப்பட்டார் என்பதை இந்தச் சபை முன்பு அமைச்சர் சொன்னால் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்ன காரணத்திற்காக மாற்றப்பட்டார் என்கிற விவரம் அத்தனையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அவர் முன்பு இருந்த சிறையில் சரியாக ஒழுங்காக நடந்து கொள்ளாத ஒரு காரணத்திற்காகவும் தான் மாற்றப்பட்டார் என்று சொல்கிறேன்.

SRI K. VINAYAKAM : Will the Hon. Minister assure this House that similar and the same kind of treatment which was meted out to the prisoner in question in the Central Jail at Coimbatore. is being meted out to him in the District Jail at Pudukkottai also?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no question of any particular treatment being meted out to the prisoner. I may assure the hon. Member that all possible comforts are provided for him even in the Jail at Pudukkottai.

SRI M. KALYANASUNDARAM : சிறையில் அவருக்கு என்ன வசதிகள் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எப்போது சிறையில் இருப்பது என அவரும் துணிந்து விட்டாரோ அப்போது அவரும் அந்த வசதிகளைப் பற்றிக் கவலைப்படப் போவதில்லை. இது விஷயம் பற்றி அமைச்சர் அவர்களுக்கு உண்மையான விவரங்கள் எதுவும் தெரியவில்லையே ! என்ற காரணத்திற்காகத் தான் நான் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். இந்தக் கைதி அங்குள்ள அதிகாரிகளின் மீது லஞ்சப் புகார் செய்த காரணத்திற்காகத் தான் இவர் மீது ஒழுங்கீனமாக நடந்து கொண்டார் என அதிகாரிகள் பொய்யாக பழி சுமத்தி அந்தச் சிறையில் இருந்து அவரை மாற்றினார்கள் என்பது என்னிடம் இருக்கும் தகவல். இதை வைத்துக்கொண்டு அதைப்பற்றி தக்கபடி விசாரணை நடத்த அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அந்தக் கைதிக்கு சிறையில் என்ன என்ன வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைப் பற்றி கனம் அங்கத்தினர் எப்படிக் கவலைப்படவில்லையோ, அப்படியே அவர் எந்தச் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பதைப்பற்றியும் கவலைப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவரைச் சிறையில் இருந்து மாற்றுவதற்கு தகுந்த காரணம் உண்டு என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் அங்குள்ள கைதிகள் எந்த அதிகாரியின் மீது லஞ்சப் புகார் செய்தாலும் அதைப்பற்றி உடனடியாக விசாரணை செய்யவும், வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்று நான் சொல்லு கிறேன்.

STARRED QUESTIONS.

Railwayline from Tirunelveli to Cape Comorin

* 273 *Q*.—SRI M. KALYANASUNDARAM (on behalf of Sri T. T. Daniel) : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have recommended to the Centre the extension of the Railway line from Tirunelveli to Cape Comorin via Nagercoil?